**கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட கோராலே பிரதேச சபை - 2021**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட கோராலேபிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட கோராலே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குஇணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்குஇணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான ரூபா 380,960 ஆன காணியொன்றை நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்காததுடன், இரண்டு காணிகளின் மற்றும் ஒரு கட்டிடத்தின் பெறுமதியை மதிப்பீடு செய்தோ கணக்கீடு செய்தோ இருக்கவில்லை. | கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதென. | காணிகளின் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டில் மைதானமொன்றை அபிவிருத்தி செய்ய செலவிட்டிருந்த ரூபா 960,529 ஆன கிரயத்தை நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை. | மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பததென. | மூலதன செலவுகளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமான ரூபா 6,390,000 ஆன கெப் வண்டியை மீளாய்வாண்டினுள், நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை. | கணக்குகளிற்கு தகவல்களை வழங்கும் போது தவறுதலாக குறிப்பிட முடியாதிருந்தது. எதிர்காலத்தில் குறிப்பிடுவதென. | மோடார் வண்டிகளின் கிரயத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட ரூபா 297,911 ஆன வாசிகசாலை புத்தகங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தெளிவுபடுத்தலொன்றை முன்வைப்பதென. | வாசிகசாலை புத்தகங்களின் சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் வீதவரி வருமானம் ரூபா 429,488 குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ரூபா 372,731 ஆனது தவறோடு உள்ளிடங்கியிருந்த மீதியை சரிசெய்தல் ஒன்றாகவும்,ரூபா 57,867 ஆன வித்தியாசத்தை 2022 ஆண்டில் சரிசெய்வதென. | வீதவரி வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதியில் குப்பை வரி வருமானம் ரூபா 167,850 குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆண்டில் ஜர்னல் குறிப்பு மூலம் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | குப்பை வரி வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 230,480 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இறுதிக் கணக்குகளிற்கு வழங்கிய பிரசுர அட்டவணையில் தவறான தரவுகள் குறிக்கப்பட்டுள்ளதாக மற்றும் தற்போது சரிசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளதென. | ஊழியர் கடன் மீதியை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

**1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 05 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதி மற்றும் அட்டவணைகளின் மீதிக்கிடையில் ரூபா 12,119,019 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | மீதிகளை சரிசெய்து கொள்ள குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கிறேன். | சரியான பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் ஐந்தொகையில் காட்டியிருந்த ரூபா 7,049,296 ஆன 02 சொத்து விடயங்கள் மற்றும்ரூபா 2,725,738 ஆன 03 பொறுப்பு விடயங்களைசொத்துக்கள் பதிவேடு, பதிவேடு, அட்டவணைகள் மற்றும் மீதி உறுதிப்பாடுகள் சமர்பிக்கப்படாததால், கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | சொத்துக்கள் கணிப்பீட்டு நடவடிக்கை முடிவடைந்துள்ளதுடன், எதிர்காலத்தில் பதிவேடுகளிற்கு உட்படுத்துகிறேன். | நிதிக்கூற்றக்களின் மீதிகளுக்கான சான்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|---|
| | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 571 மற்றும் 571(இ) | ரூபா 6,443,631 ஆன காலாவதியான வேலை வைப்புக்கள், கலப்பு வைப்புக்கள் மற்றும் ஏனைய வைப்புக்கள் 155 இனை நிதிப்பிரமாணம் பிரகாரம் வருமானத்திற்கு எடுத்திருக்கவில்லை. | கொரோனா நோய் நிலைமை காரணமாக, உரிய திகதியில் வேலைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாது போனதாகவும், முடியுமான வேலைகளை மேற்கொண்டதாகவும் மற்றும் மேற்கொள்ள முடியாது போன வேலைகள இரத்துச் செய்வதென. | வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 371 (இ) | பதவிநிலையல்லாத அலுவலர்களுக்கு 30 சந்தர்ப்பங்களில் ரூபா 765,200 ஆன உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | பதவிநிலை அலுவலராக செயலாளர் மாத்திரம் இருப்பதால், செயலாளரின் மேற்பார்வையின் கீழ் விடயப் பொறுப்பு அலுவலர்களுக்கு முற்பண வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதென. | நிதிப்பிரமாணம் பிரகாரம நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 9,020,107 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 93,823,908 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

சபையின் வருமானம் சேகரிக்கும செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| மீளாய்வாண்டு திசெமபர் 31 திகதியில் நிலுவை வீதவரி வருமானம் ரூபா 18,720,121 அறவிடப்பட்டிருக்காததுடன். அம்மீதியினுள் ஒரு அலகின் நிலுவை ரூபா 5,000 இற்கு அதிகமான 364 அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,842,241 உள்ளடங்கியிருந்தது. | 2022 ஆண்டு வீட்டிற்கு வீடு சென்று வீதவரி அறவிடும் நிகழ்சித் திட்டமொன்றை நடாத்துவதன் மூலம் நிலுவையை அறவிடும் நடவடிக்கையை மேற்கொள்ள எதிர்பார்ப்பதென. | நிலுவைவீதவரியை அறவிட வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| **வியாபார உரிமையை குத்தகை வழங்கல்** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் சபைக்கு சொந்தமான ஹெல பொஜுன்ஹல குத்தகை வழங்கியதற்காக அறவிட வேண்டிய ரூபா 576,000 அறவிடல் நிலுவையாகக் காணப்பட்டதுடன், அதற்குரிதான தாமதக் கட்டணம் 10 சதவீத தொகையையும் அறவிட்டிருக்கவில்லை. | பொதுச் சபை தீர்மானத்தின் பிரகாரம் ஒரு பகுதி பதிவழிக்கப்பட்டுள்ளதாகவும், எஞ்சிய தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| **வியாபார அனுமதிப்பத்திரம்** | | |
| 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் இலக்கம் 149 விதி பிரகாரம், மீளாய்வாண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திரம் தொடர்பான கணிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன், ஆண்டிறுதியில் 323 வணிக வியாபாரங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 435,750 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தற்போது ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். | கணிப்பீட்டு நடவடிக்கையை மேற்கொண்டு நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| **(ஈ) ஏனைய வருமானம்** | | |
| **முச்சக்கர வண்டி கட்டணம்** | | |
| மீளாய்வாண்டிற்காக முச்சக்கர வண்டிகள் தொடர்பாக கணிப்பீடொன்றை செய்திருக்காததுடன், 2019 ஆண்டு கணிப்பீட்டின் பிரகாரம், பில்லிடப்பட்டிருந்த 102 முச்சக்கர வண்டிகளிற்குரிய ரூபா 122,400 ஆன அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கணிப்பீட்டை மேற்கொண்டு முன்நடவடிக்கை எடுப்பதென. | கணிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ள மற்றும் நிலுவை அனுமதிப்பத்திர கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**சுற்றுலா சபையில் பதிவு செய்த ஹோட்டல்**

| | | |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் இலக்கம் 149 பிரகாரம், சுற்றுலா சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல்களின் வருமானத்தின் ஒரு சதவீதத்தை அனுமதிப்பத்திர கட்டணமாக அறவிட வேண்டிய போதும், அதிகார பிரதேசத்தில் ஹோட்டல்களிலிருந்து 2019/2020 ஆண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 2,355,518 ஆன தொகையை அறவிட்டிருக்காததுடன், 2020/2021 ஆண்டுகளிற்குரிய கணக்கறிக்கையை பெற்று அல்லது அறவிட வேண்டிய வருமானத்தை கணக்கிட்டேனும் இருக்கவில்லை. | கட்டணத்தை கணக்கிட்டு செலுத்துமாறு ஹோட்டல் உரிமையாளர்களுக்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளதென. | நிலுவை அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடல் அல்லது பில்லிடப்படாத வருமானத்தை இனங்கண்டு பில்லிட வேண்டும். |

**(ஊ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2021 திசெம்பர் 31 திகதிக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 543,580 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 42,730,579 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற தண்டப்பண நிலுவை தொகை கிடைத்துள்ளதாக மற்றும் முத்திரை கட்டணத்தை எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவிட வேண்டும். |

## 2.3 மிகை அறவீடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பிரதேச சபை சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் பொறுப்புவாயிந்தவர்களுக்கு எதிராக என்னால் கடந்த ஆண்டினுள் ரூபா 262,608 பெறுமதியான மிகை அறவீடு விதிக்கப்பட்டிருந்ததுடன்,மீளாய்வாண்டு இறுதியில் அத் தொகையை அறவிட்டிருக்கவில்லை. | குறித்த உறுப்பினர்களுக்கு இத் தொகையை செலுத்துமாறு அறிவித்து கடிதம் அனுப்பிய போதும், இது வரை எத்தொகையையும் செலுத்தவில்லை என. | மிகைக் கட்டண சான்றிதழ் பிரகாரம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் 05 ஆண்டு காலத்தை விஞ்சியிருந்த கூட்டுத் தொகை ரூபா 50,678,259 ஆன கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளை அறவிட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டு இறுதியில் 05 ஆண்டு காலத்தை விஞ்சியிருந்த கூட்டுத் தொகை ரூபா 3,741,398 ஆன செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்த்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்க்க வேண்டும். |

### 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசத்தில் உப பிரிப்பு மேற்கொண் காணிகளிலிருந்து சமூக, உல்லாச விவகாரங்கள் மற்றும் திறந்த வெளிகலாக பயன்படுத்த பெற்றிருந்த 19 காணித் துண்டுகளை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தாது விளைவற்று காணப்பட்டன. | தற்போது வேலி எல்லைகளை அமைக்கும் நடவடிக்கை இடம்பெறுவதென. | சபைக்கு கிடைத்த காணித் துண்டுகளை பொது நடவடிக்கைகளுக்கு பாதுகாத்து பயன்படுத்த வேண்டும். |

### 3.3 பண்டகக் கணிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கடந்த ஆண்டிற்குரியதாக 05 வாசிகசாலைகளில் மேற்கொண்ட பண்டக கணிப்பீட்டின் போது, இனங்கண்ட ரூபா 74,767 பெறுமதியான 265 புத்தகங்களின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், ஏலத்தில் விற்பனை செய்ய பரிந்துரைத்த மற்றும் பண்டக கணிப்பீடு ஆண்டிறுதியிலும் ஏலத்தில் விற்றிருக்கவில்லை. | கொவிட தொற்று நிலைமையின் முன் தாமதித்ததாகவும், தற்போது தேவையான நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளதென. | பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஏலவிற்பனை நடவடிக்கைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் சபையினால் மேற்கொண்ட 03 வேலைகளிற்குரிய கொடுப்பனவு வவுசர்களின் பிரகாரம் செய்யப்படாத வேலைகளிற்காக ரூபா 222,433 தொகை ஒப்பந்ததாரருக்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | ஒரு வேலையின் மேற்கொள்ளாத வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மற்றும் ஏனை 02 வேலைகளினது பணிகளை பூர்த்தி செய்த பின்னர் பதில் வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மேற்கொள்ளப்பட்ட வேலைகளிற்கு மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டியதுடன், கூடுதலாக செலுத்துவதற்கு பொறுப்பு வாய்ந்த அலுவலர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிறுதியில் அங்கீகார ஆளணியின் 06 பதவிகளில் காணப்பட்ட 08 வெற்றிடங்களை நிரப்பியிருக்கவில்லை. | தற்போது முகாமைத்துவ சேவை அலுவலர் 02 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதென. | முக்கிய வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |